# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 29/10/2022 | முதல் | 02/11/2022 |
| அறிக்கை எண் : | 086/ 2022 | வெளியீட்டு நாள் : | | 28/10/2022 | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (23.10.2022 முதல் 27.10.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 02-11-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/10 | 24/10 | 25/10 | 26/10 | 27/10 | தேதி | நாள்-4 29/10 | நாள்-4 30/10 | நாள்-4 31/10 | நாள்-4 01/11 | நாள்-5 02/11 |
| 0.0 | 0.7 | 2.7 | 0.2 | 0.5 | மழை (மி.மீ) | 0 | 4 | 10 | 6 | 20 |
| 33 | 34 | 34 | 35 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 32 | 32 | 31 |
| 25 | 24 | 24 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 23 | 22 |
| 4 | 6 | 4 | 4 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 6 | 7 |
| 75 | 86 | 76 | 83 | 74 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 80 | 80 | 85 |
| 66 | 75 | 59 | 61 | 55 | | 60 | 60 | 65 | 65 | 70 |
| 0 | 7 | 5 | 3 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 0 | தெற்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | வட கிழக்கு | வட கிழக்கு | மேற்கு | வட மேற்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அக்டோபர் 30, நவம்பர் 1 தேதி லேசான மழையும், 31, 2 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், வடகிழக்கு, மேற்கு மற்றும் வடமேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அக்டோபர் 31 கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும்,

மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்** : நெல், உளுந்து, கால்நடை.

நெல்:

- நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5 சிசி என்ற அளவில் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி அட்டையை முறையே நடவுசெய்ததிலிருந்து 37, 44, 51 வது நாட்களில் கட்ட வேண்டும்.

உளுந்து:

- பயறு வகை பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஐந்து என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும் பொறிகளை வைத்து நோய் பரப்பும் வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.

கால்நடை:

- தற்போது நிலவும் தொடர்மழை காலத்தில், தீவனத்தில் மற்றும் ஆழ் கூளத்தில் ஈரப்பதம் அதிகம் காணப்படுவதால் கிளாஸ்டிரிடியம், ஈகோலை மற்றும் இரத்தக்கழிச்சச்லை உண்டாக்கும் காக்சீடியா கிருமிகள் வளர உகந்த சூழ்நிலை உள்ளதால் தரமான தீவன மூலப்பொருட்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்